சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: திரு. வா. சுந்தரராஜ், எம்.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2022-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள் வியாழக்கிழமை

இடை மனு எண். 2/2022

இன்

அசல் வழக்கு எண்.98/2018

...

சின்னையா ... மனுதாரர்/பிரதிவாதி

// எதிர் //

விஸ்வநாதன்
(மேற்படியாரின் அதிகார முகவரான சேது மூலம்) ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக 08.12.2022-ம் தேதியன்று வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.L.சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.பழனிச்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு இந்நீதிமன்றம் வழங்கும்...

## உ த் த ர வு

**1.** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சில ஆவணங்கள் சகிதம் திருப்பத்துார் வட்டாட்சியர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி அசல் வழக்கில் சாட்சியம் அளிக்க ஏதுவாக இந்நீதிமன்றம் மூலம் சாட்சிய அழைப்பாணை அனுப்ப அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் சிபிசி. கட்டளை 16, விதி 1(2) மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் : -**

எதிர்மனுதாரர், மனுதாரர் மீது தாவா வழக்கு சொத்தினைப் பொறுத்து சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில்

மனுதாரர் முறையாக எதிர்வாதம் செய்து வருகிறார். அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. தாவா வழக்குச் சொத்தில் சுமார் 4 ½ செண்டினை மட்டும் இந்த எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனார் சேது அவர்களுக்கு கடந்த 09.11.2006ம் தேதியில் கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனார் சேது அவர்களும் 4 ½ செண்ட் அளவுள்ள விஸ்தீரணத்திற்கு பட்டா மாறுதல் உத்தரவு பெறாமல் மோசடியாக 0.02.0 ஏர்ஸ் அளவுள்ள அதாவது சுமார் 4.94 செண்ட் அளவுள்ள விஸ்தீரணத்திற்கு மோசடியாக பட்டா எண்.2587 என்ற எண்ணில் பட்டா பெற்றுள்ளார். மேற்படி மோசடி பட்டாவின் அடிப்படையில் தாவா வழக்கினை எதிர்மனுதாரர்/வாதி மேல்நடத்தி வருகிறார். எனவே மனுதாரரும் மேற்படி மோசடி பட்டா குறித்து முறையாக ஆட்சேபணை செய்துள்ளார்.

இந்நிலையில் தாவா சொத்தினைப் பொறுத்து ஏற்பட்ட மேற்படி பட்டா எண். 2587 என்ற எண் பட்டாவும் மோசடியானது என்பதை நிரூபிக்கவேண்டிய கடப்பாடு மனுதாரருக்கு இருப்பதால் மேற்படி பட்டாவை வழங்கிய திருப்பத்தூர் வட்டாட்சியர் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி அசல் வழக்கில் சாட்சியம் அளிக்க ஏதுவாக இந்நீதிமன்றம் மூலம் சாட்சிய அழைப்பாணை அனுப்ப அனுமதியளித்து உத்தரவிடவேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். தாவா மனுவினை அனுமதித்தால் மட்டுமே அசல் வழக்கில் மனுதாரரின் எதிர் வாதத்தினை மெய்பிக்க இயலும். தாவா மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு யாதொரு பாதகமும் ஏற்படக் கூடியதில்லை. எனவே மனுதாரரின் மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

**3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் : -</u>**

மனுதாரரின் மனுவில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். வாதிதரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1

ஆவணத்தின்படி மனுதாரர்/பிரதிவாதியானவர் கடந்த 09.11.2006ம் தேதி எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனார் சேதுவிற்கு நெற்குப்பை வருவாய் கிராம சர்வே எண்.129/4 புன்செய் மனையிடத்தில் ”ஏர்ஸ் 0.02.0 உள்ளதற்கு செண்ட் 4 ½ சதுர அடி 1962” என குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி திருப்பத்தூர் வட்டாட்சியரும் கடந்த 20.04.2007ம் தேதி மேற்படி மொத்த சொத்திலிருந்து சர்வே எண்.129/4ஐ உட்பிரிவு செய்து தாவா சொத்தான சர்வே எண்.129/4B விஸ்தீரணம் 0.02.0 ஹெக்டேர் என கண்டு தான் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்துள்ளார். இதில் எந்த மோசடியும் நடைபெறவில்லை. மனுதாரர்/பிரதிவாதி கிரையம் கொடுத்த மேற்படி வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் தாவா சொத்தின் விஸ்தீரணம் 0.02.0 ஹெக்டேர் என குறிப்பிட்டிருப்பதில் அதன்படி திருப்பத்தூர் வட்டாட்சியர் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்துள்ளார். பரப்பளவு கணக்கீட்டின்படி 0.02.0 ஹெக்டேர் என்பது 4.94 செண்ட் என்பது அனைவரும் அறிந்ததேயாகும். இதனை மறுக்கவும் மனுதாரருக்கு estoppel by deed சட்டப்படி உரிமையில்லை. மேலும் மனுதாரர் எழுதிக்கொடுத்த பதிவு கிரையப் பத்திரப்படி திருப்பத்தூர் வட்டாட்சியர் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் அவரை சாட்சியாக விசாரிப்பதில் எந்த உண்மையும் வெளிவரப் போவதில்லை.

இந்நிலையில் இந்நீதிமன்றம் தாவா வழக்கில் I.A.No.270/2018 -ன் படி நியமனம் செய்த ஆணையர், நெற்குப்பை கிராம நிர்வாக அதிகாரி, சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அதன்படி மனுதாரர் சரியான பிரதிபிரயோசனத்தை பெற்றுக்கொண்டு 09.11.2006ம் தேதி வாதிக்கு கிரையம் கொடுத்த சர்வே எண்.129/4B தாவா சொத்தின் வடபகுதியில் பிரதிவாதியே 27 x 10.75 அடிகள் நீள அகலத்தில் ஆக்கிரமித்து தார்சு கெட்டிக்கட்டிடம் கட்டியுள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். தாவா சொத்தில் சுமார் 1 ¼ சென்டிற்கு கட்டிடம் கட்டியுள்ளதுடன் ஆகமொத்தம் 2 சென்டிற்கு மேல் பிரதிவாதியே

ஆக்கிரமித்துள்ளார். எனவே தான் இந்த எதிர்மனுதாரர் சுவாதீன மீட்புபரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா மனு சட்டப்படிக்கும் சங்கதிகள்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் மனு அனுமதிக்க தக்கதா என்பதேயாகும்?

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6.** எதிர்மனுதாரர் தாவா சொத்தினை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி சுவாதீனம் ஒப்படைக்க வேண்டி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி முறையாக எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்து வருகிறார். மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனார் சேது அவர்களுக்கு 09.11.2006ம் தேதி சுமார் 4 ½ சென்டை கிரையம் கொடுத்துள்ளார். மனுதாரரின் வாதமானது கிரையம் கொடுத்த 4 ½ சென்டிற்கு பட்டா மாறுதல் உத்தரவு பெறாமல் 4.94 சென்ட் அளவிற்கு மோசடியாக பட்டா பெற்றுள்ளதாகவும் அதனால் பட்டா வழங்கிய திருப்பத்துார் வட்டாட்சியரை மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி சொத்திற்கு பட்டா தாக்கல் செய்துள்ள நிலையில் அது மோசடியாக பெறப்பட்டதா என்பது வழக்கல்ல. அது குறித்து இந்த வழக்கில் தீர்மானிக்கவேண்டிய தேவையும் அல்ல. மேலும் தாவா சொத்தினை நில அளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அளந்து அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கானது மனுதாரர்/பிரதிவாதி தாவா சொத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதை இடித்து அப்புறப்படுத்தி

சுவாதீனம் ஒப்படைக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சேது பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக எதிர்மனுதாரர்/வாதியை, மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் பட்டா வழங்கிய திருப்பத்தூர் வட்டாட்சியரை விசாரணை செய்யவேண்டும் என்று தாக்கல் செய்துள்ள மனுவானது Merit அடிப்படையில் தகுதியற்றது என்பதால் இந்த மனுவானது தள்ளுபடி செய்யக்கூடியதாக உள்ளது.

**7)** முடிவாக இந்த மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் நீக்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 2022-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள் வியாழக்கிழமை அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
சிவகங்கை.

மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள்
மற்றும் சான்றாவணங்கள் - இல்லை-.

சார்பு நீதிபதி,
சிவகங்கை.

சார்பு நீதிமன்றம், சிவகங்கை
இ.ம.எண் 02/2022
இன்
மு.வ.எண்.98/2018
சீரான-வரைவு உத்தரவு
நாள்.15.12.2022